## இந்தப் பிரசுரத்தின் துல்லியத் தன்மை குறித்த முக்கியமானத் தகவல்

தயவு செய்து குறித்துக்கொள்ளவும்:

இந்தப் பிரசுரம் கடைசியாக புதுப்பிக்கப்பட்டதிலிருந்து ஏற்பட்டுள்ள சில முக்கியமான மாற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரசுரத்தின் குறிப்பிட்ட பிரிவுகள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்பதை நீங்கள் பார்க்க விரும்பினால், பின்வரும் தளத்தில் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழியில் மட்டுமே கிடைக்கப்பெறும் ஜூன் 2012 பதிப்பை நீங்கள் திறனாய்வு செய்ய வேண்டும்: (புதிய தளத்தை நுழைக்கவும்).

- பெரும்பாலான குடும்பநல நீதிமன்ற வழக்குகளில் கணவன் மனைவி இரண்டு பேரும் ஒரு கட்டாயமான தகவல் திட்ட அமர்வில் (MIP)கலந்து கொள்ள வேண்டும் என்பதே முதல் படியாக இருக்கிறது. கட்டாயமான தகவல் திட்ட அமர்வில் (MIP) வயது வந்தோர்களும், குழந்தைகளும் பிரிவினையை எவ்வாறு அனுசரித்து நடக்க வேண்டும் என்பதையும், பிரிவினை மற்றும் விவாகரத்தின் போது எழும் சர்ச்சைகளுக்கும், சட்டப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் பொருட்டு நீங்கள் முயற்சி செய்து பார்க்கக்கூடிய பல்வேறு வழிகளையும் கற்றுக்கொள்வீர்கள்.

- தற்போது ஆண்டேரியோ எங்கும் உள்ள குடும்பநல நீதிமன்றங்களில் குடும்ப மத்தியஸ்தம் மற்றும் தகவல் சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன. குடும்ப மத்தியஸ்தம் மற்றும் தகவல் சேவைகள் குறித்த பட்டியலுக்கு, பின்வரும் இணையதளத்துக்கு விஜயம் செய்யவும்: http://www.attorneygeneral.jus.gov.on.ca/english/family/service_provider_by_family_court_location.asp.

- ஒரு குடும்பநல நீதிமன்ற நடவடிக்கையில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால் மற்றும் நீங்கள் ஒரு குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவராக இருந்தால், உதவியைப் பெற நீங்கள் ஒரு குடும்பநல நீதிமன்ற ஆதரவுப் பணியாளரையும் சந்திக்கலாம். இந்தச் சேவைகளை அளிப்பவர்களின் பட்டியலுக்கு பின்வரும் இணையதளத்துக்கு விஜயம் செய்யவும்: http://www.attorneygeneral.jus.gov.on.ca/english/family/family_justice_services.asp#fcsw.

- 1 ஜனவரி 2012 முதல், திருமணமான கணவன் மனைவியால் பெறப்படும் ஆண்டேரியோ ஓய்வூதியங்கள் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றன மற்றும் பிரிவினையைத் தொடர்ந்து அவை எவ்வாறு பிரித்தளிக்கப்படுகின்றன என்பது தொடர்பான புதிய விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. கணவனும், மனைவியும் தற்போது ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதிய உறுப்பினரின் வட்டியை மதிப்பிடுமாறு ஓய்வூதியத் திட்ட நிர்வாகியைக் கேட்க வேண்டும். பின்னர் அந்த மதிப்பீடு ஓய்வூதிய உறுப்பினரின் வாழ்க்கைத் துணையின் சொத்துக்கள் பட்டியலில் சேர்க்கப்படும்.